விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 155 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 09 வெள்ளிக்கிழமை (23.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நல்லூரில் அசைவ உணவகத்தின் பெயர்ப் பலகை அகற்றம்

### யாழ்.மாநகர சபை அதிரடி




(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய முன்வீதியில் அனுமதியின்றி திறக்கப்பட்ட அசைவ உணவகத்தின் முன்னால் வைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற விளம்பரப்பலகை நேற்று யாழ்ப்பாணம் மாநகர சபையின

15ஆம் பக்கம் பார்க்க

## இளவாலைச் சந்திக்கு அருகாமையில் 22 வயது யுவதி கடத்தல்

### தெல்லிப்பழை பொலிஸார் தீவிர தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலைச் சந்திக்கு அருகாமையில் 22 வயதுடைய இளம் யுவதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதியும், பூநகரி கௌதாரிமுனை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

# வடக்குக் காணி விவகாரம் தொடர்பில்

## வடக்கு, கிழக்கு, எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் பிரதமர் ஹரிணி இன்று சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திலுள்ள காணி விவகாரம் தொடர்பில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று கலந்துரையாடவுள்ளார். பாராளுமன்றத்தில் இன்று காலை குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அதிகளவான ஐஸ் போதைப் பாவனை

### புதுக்குடியிருப்பில் இளம் குடும்பஸ்தர் மரணம்

(முல்லைத்தீவு)

அதிகளவான ஐஸ் போதைப்பொருள் பாவனை காரணமாக - புதுக்குடியிருப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளம்

15ஆம் பக்கம் பார்க்க

### சூட்டுக் காயங்களுடன்

## மன்னாரில் கடற்படை சிப்பாய் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கடற்கரை பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம் ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த கடற்படை

15ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் உப்பு இனி இல்லை

### அர்ச்சுனா – அமைச்சர் சுனில் சபையில் கடும் வாக்குவாதம்




(கொழும்பு)

உப்பு விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும்

15ஆம் பக்கம் பார்க்க

## ஆலய உண்டியலுடன் மோதியதில் ஒருவர் மரணம்

### மரக்கறி வாங்கச் சென்றபோது கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தைக்கு மரக்கறி வாங்க மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் ஆலய உண்டியலில் மோதி உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### மல்லாகத்தில்

## இளம் யுவதி திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் இளம் யுவதி ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இதில் மல்லாகம் 8ஆம் கட்டையைச் சேர்ந்த சந்திர

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது அவசியம்

### உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் ஆளுநர்



16ஆம் பக்கம் பார்க்க

## சிறைக்கு அனுப்புவதனால் மக்கள் பிரச்சினை தீராது

### சபையில் நாமல் எம்.பி

(கொழும்பு)

எம்மை சிறைக்கு அனுப்புவதனால் மக்கள் பிரச்சினை ஒருபோதும் தீராது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 25 - 01 - 1954

உதிர்வு 22 - 05 - 2025

## வைத்திலிங்கம் சிவராஜா

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவராஜா (டிக்கெட் பரிசோதகர் - இலங்கை போக்குவரத்து சபை) அவர்கள் நேற்று 22.05.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் வைத்திலிங்கம் - கண்மணி தம்பதியினரின் பாசமிகு மகனும் அமரர் பஞ்சாட்சரம் - தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் அமரர் சத்தியபாமாவின் பாசமிகு கணவரும் விஜித்தன், சைலஜா, விஜிமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மதிவதனி, இன்பகரன், நிதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிந்துஜன், ஹரணிகா, லிந்துஜன், ஆதவன், அனிருத் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் கமலாதேவியின் பாசமிகு சகோதரரும், ஏரம்பமூர்த்தி, அமரர் தர்மகுலசேகரம், அமரர் பஞ்சரத்தினம், சத்தியராணி, பத்மாவதி, சத்தியசீலன், சூரியகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23.05.2025 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

சைலஜா : + 94 77 117 7802
விஜிமோகன் : + 94 77 774 0306

தகவல்:
குடும்பத்தினர்

(1158)

## வடக்கு...

அரசாங்கத்தினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 ஆம் திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தனர்.

அதுமாத்திரமன்றி இவ்வர்த்தமானி அறிவித்தல் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பாக வாபஸ் பெறப்படாவிடின் வட, கிழக்கில் மாபெரும் எதிர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர்கள் எச்சரித்திருந்தனர்.

அதனையடுத்து அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துவதாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இன்றைய தினம் மு.ப 11.00 - பி.ப 1.00 மணி வரை பாராளுமன்றத்தில் தனது தலைமையில் நடைபெறவிருக்கும் சந்திப்பில் பங்கேற்குமாறு பிரதமர் ஹரினி அமரசூரிய வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதன்படி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இச்சந்திப்பில் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவித்துள்ள அக்கட்சியின் பாராளுமன்றக்குழுத்தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசாங்கம் எத்தகைய காரணங்களை முன்வைத்தாலும், இவ்வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தமக்கு உண்மையிலேயே வட, கிழக்கில் உள்ள காணிகளை அபகரிக்கும் நோக்கம் இல்லை எனவும், மாறாக மக்கள் முகங்கொடுத்துவரும் காணிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கே விரும்புவதாகவும் அரசாங்கம் கூறுமாயின், அதற்கென விசேட ஆணைக்குழுவொன்றை அமைத்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என இச்சந்திப்பின்போது தான் சுட்டிக்காட்டவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரதமருடனான இன்றைய சந்திப்பில் தமது கட்சியின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்பர் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் அறிவித்துள்ளார்.

மேலும் இச்சந்திப்பின்போது வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்படவேண்டும் என வலியுறுத்தவிருப்பதாகவும், அதேபோன்று மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம், குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, தையிட்டி என்பன உள்ளடங்கலாக வட, கிழக்கு மாகாணங்களில் ஏனைய நிலப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-4,7)

# மரண அறிவித்தல்



மலர்வு 17.02.1970

உதிர்வு 21.05.2025

## திருமதி இந்திரகுமார் நாகநந்தினி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் நாகநந்தினி அவர்கள் 21.05.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரசாமி - இராசமலர் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - கமலாதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும் இந்திரகுமார்(தபால் திணைக்கள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் விதுஷன், துளசிகா, சுவஷ்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரகுமாரன்(சுவிஸ்), சுதாசினி(சுவிஸ்), துஷ்யந்தி(பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் சகோதரியும் கயல்விழி, பிரபாகரன், கணேந்திரன், சாந்தகுமாரி, ரவிக்குமார், ராஜேந்திரன், காலஞ்சென்றவர்களான சாந்தகுமார், வசந்தகுமார், ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"இந்திரவாசம்"
அளவோடை வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

(4351)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுக்கமாகும் போக்குவரத்து கட்டமைப்பு

# புதிய விதிகளும் அறிமுகம்!

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



**(கொழும்பு)**

**வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கிலும், முறையான போக்குவரத்துக் கட்டமைப்பை ஏற்படுத்தும் நோக்கிலும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர்,

பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 40 வயதுக்கும் மேற்பட்ட சாரதிகளுக்காக, விசேட வைத்தியப் பரிசோதனை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை அடையாளம் காண்பதற்காக, விசேட உபகரணங்களைப் பயன்படுத்தி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வீதிகளில் காணப்படும் சகல வீதிச் சமிக்ஞை விளக்குகளிலும் நேரமானியைப் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர், அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களின் பின்பகுதி ஆசனங்களில் அமர்ந்து செல்பவர்களுக்கும் ஆசனப்பட்டியைக் கட்டாயமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 12 மாதங்களில் இலத்திரனியல் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

# வேகமெடுக்கும் கொரோனா இலங்கைக்கு ஆபத்தா?

(கொழும்பு)

ஆசிய கண்டத்தில் உள்ள சில நாடுகளில் பரவிவரும் கொவிட்-19 தொற்றின் உப திரிபான ஜே.என்.வன் திரிபு தொடர்பில் பதற்றமின்றி ஆய்வு நடத்தப்பட வேண்டும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் கற்கைகள் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர கோரிக்கைவிடுத்துள்ளார்.

தமது எக்ஸ் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைப் பதிவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த திரிபு இதுவரையில் இலங்கையில் பதிவாகவில்லை என்றும் அவர் தமது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், கொவிட்-19 வைரஸ் பரவல் தொடர்பில் சுகாதார அமைச்சினால் இதுவரையில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் விடுக்கப்படவில்லை என தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

# பெரிய வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)


சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்தவகையில், இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் ஒரு கிலோ மொத்த விலை 80 ரூபாயாகக் குறைந்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த பண்டிகை காலத்தில், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை 280 ரூபாவாக உயர்ந்திருந்தது.

கடந்த சிறுபோகப் பருவத்தில் பயிரிடப்பட்ட உள்ளூர் பெரிய வெங்காயத்தின் இருப்பு தீர்ந்துவிட்டதன் காரணமாக பத்து மாதங்களுக்கு பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் ஒரு கிலோ மொத்த விலை 80 ரூபாயாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகார விழா 1 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி-2025 சிலப்பதிகார விழாவின் முதலாம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கரவெட்டி துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்திலுள்ள தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்பு நடனத்தினை கி.துஷாணிக்கா, சி.அபிசன்யா, உ.விதுர்ஷிகா, கோ.ரதீஷனா மற்றும்.த.சர்மிகா ஆகியோரும் மங்கல விளக்கேற்றலை சுகுமாரன் அன்புமலர் தம்பதிகள் மற்றும் விஷ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி கோபாலகிருஸ்ணன் காயத்திரி தம்பதிகள் ஆகியோரும் கடவுள் வாழ்த்தினை செல்வி. தர்சிகா கிருஸ்ணாகரனும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை துன்னாலை ஸ்ரீ சாரதாபீட கவிதாசிரோமணி சிவசக்தி ஸ்ரீ கலாநிதி ராம் தேவலோகேஸ்வரக்குருக்களும், வாழ்த்துரையினை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர், வரவேற்புரையினை ம.பகீரதன் நிகழ்த்தவுள்ளதுடன், தொடக்கவுரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், கௌரவிப்புரையினை சி.இலம்போதரன், நன்றியுரையினை செ. சரண் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் "எமது தேசத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் தேவையானது உயர்ந்த அறமே, தெளிந்த அறிவே" எனும் தொனிப்பொருளில் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் திருமதி கோசலை மதன் நடுவராகப் பங்குபற்றும் விவாத அரங்கு மற்றும் "இளங்கோவடிகள் தன் காப்பியத்தினுள் பெரிதும் வலியுறுத்தும் பாவிகச் செய்தி" எனும் தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் நடுவராகப் பங்குபற்றும் பட்டிமண்டபம் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் விருது வழங்கும் நிகழ்வில் புலமை ஒலி உயர்விருதினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் கல்விப் பணிக்கான உயர் விருதினை வடகிழக்கு மாகாண ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சின்னையா சிவராசா அவர்களும் இலக்கியப்பணிக்கான உயர் விருதினை மூத்த சிறுகதை ஆசிரியர் செ.கந்தசாமி அவர்களும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (நி-3)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 220 | 150 | 200 |
| தக்காளி | 800 | 800 | 1000 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 500 | 550 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 950 | 1000 | 800 | 900 |
| பூசணி | 160 | 200 | 170 | 150 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 600 | 700 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | -- | 400 |
| பயற்றங்காய் | 400 | 200 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 220 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 550 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 850 | 1000 |
| போஞ்சி | 300 | 450 | 800 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 140 | 100-160 | 200 | 100 | 200 |
| தேசிக்காய் | 250 | 400 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 150 | 100-220 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

## மரண அறிவித்தல்

### திருமதி. சகுந்தலா பரங்கிரிநாதன்

(இளைப்பாறிய ஆசிரியையும், அதிபரும் - சைவ தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்)

யாழ். அராலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், கனடா **Toronto** வை வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலா பரங்கிரிநாதன் அவர்கள் 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, பானுமதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்குவேலியைச் சேர்ந்த திருஞானசம்பந்தர், தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரங்கிரிநாதன் (இணுவில்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிரிதரன் (USA), சிவதரன் (Canada), கௌசலை (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜனா, தவரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், **Jonathan, Kharsha-Sakapthan, Katrina, Khavin** ஆகியோரின் பாசமிகு பேத்தியும், Lhana அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல் : சிவதரன் (மகன்) +1(416)5703920

(நி-52)

## தேங்காய் அறுவடை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் தேங்காய் அறுவடையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 477 மில்லியன் தேங்காய்கள் அறுவடை செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 555 மில்லியன் தேங்காய்கள் அறுவடை செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (நி)

## இராசிபலன்

23.05.2025
வைகாசி 09, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 6.50 மணிவரை

உத்திரட்டாதி பிற்பகல் 12.30 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- பூரம், உத்தரம்

வளவன்


மேஷம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


மிதுனம்

எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.


கடகம்

ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும்.


சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கன்னி

விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொறுமையால் பெருமைகள் வந்து சேரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


துலாம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும்.


விருச்சிகம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


மகரம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்பினைத் தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


கும்பம்

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்


திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

அதிஷ்டக்காரன் என்பதை விட நல்லவன் என்று பெயரெடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலிக்கு எதிராக விளையாடுவது எனக்கு ரொம்ப பிடிக்கும்

## மனம் திறந்த இங்கிலாந்து கப்டன்



டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் ஓய்வு பெற்றுள்ளது ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்திய அணி அடுத்த ஜூன் மாதம் 20 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை இங்கிலாந்திற்கு சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்டில் விளையாடவுள்ளது. இந்த தொடரில் விளையாட விராட் கோலி விரும்பி இருந்தார். ஆனால் முன்னதாகவே தனது ஓய்வு முடிவை அறிவித்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார்.

இந்நிலையில், "விராட் கோலிக்கு எதிராக விளையாட முடியவில்லை என்று நினைப்பதை நான் அவமானமாக கருதுகிறேன்" என்ற செய்தியை கோலிக்கு அனுப்பியதாக இங்கிலாந்து டெஸ்ட் கப்டன் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் வெளியிட்ட வீடியோவில் பேசிய ஸ்டோக்ஸ், "இந்த முறை விராட் கோலிக்கு எதிராக விளையாட முடியவில்லை என்பது எனக்கு அவமானமாக இருக்கும் என்று நான் அவருக்கு செய்தி அனுப்பினேன். கோலிக்கு எதிராக விளையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். மைதானத்தில் நாங்கள் ஒரே மாதிரியான மனநிலையை கொண்டிருப்பதால் நாங்கள் எப்போதும் போட்டியை ரசித்திருக்கிறோம்" என்று தெரிவித்தார். (நி-3-8)

# பிளே ஆஃப் சுற்றில் மும்பை அணி! வெளியேறியது டில்லி அணி

2025 இன் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற டில்லி கேபிட்டல்ஸ் அணிக்கு எதிரான முக்கியமான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியானது 59 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 2025 ஐ.பி.எல். தொடரின் புள்ளிகள் பட்டியலில் ஹர்த்திக் பாண்டியா தலைமையிலான மும்பை அணியானது நான்காவது இடத்துக்கு முன்னேறியதுடன், பிளே ஆஃப் இடத்தையும் உறுதி செய்தது.

அதேநேரம், அக்ஸர் படேல் தலைமையிலான டில்லி அணியானது பிளேஆஃப் சுற்றுக்கான போட்டியில் இருந்து வெளியேறியது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 07.30 மணிக்கு ஆரம்பமான நடப்பு ஐ.பி.எல். தொடரின் 63 ஆவது போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி அணியானது பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மும்பை அணி, சூர்யகுமார் யாதவின் அபாரமான ஆட்டத்தால் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் போட்டியில் மும்பை அணி தொடர்ந்து விக்கெட்டுகளை இழந்து வந்தது.

எனினும், சூர்யகுமார் யாதவ் 43 பந்துகளில் 7 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்சர்களுடன் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களை எடுத்தார்.

இவரின் இந்தவொரு சிறப்பான ஆட்டம் அணியை நல்ல ஓட்ட இலக்கினை நிர்ணயிக்க அழைத்துச் சென்றார்.

டில்லி அணி சார்பில் பந்து வீச்சில் முகேஷ் குமார் அதிகப்படியாக இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். எனினும், நான்கு ஓவர்களில் அவர் 48 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

பின்னர், வழக்கமான தலைவர் அக்ஸர் படேல் இல்லாது ஃபாஃப் டு பிளெசிஸ் தலைமையில் 181 என்ற இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி அணியானது 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

சமீர் ரிஸ்வி மாத்திரம் அதிகப்படியாக 35 பந்துகளில் 39 ஓட்டங்களை எடுத்தார்.

மும்பை அணி சார்பில் பந்து வீச்சில் ஜஸ்பிரித் பும்ரா 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், மிட்செல் சாண்ட்னர் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அதிகப்படியாக கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக சூர்யகுமார் யாதவ் தெரிவானார். (நி-3-8)

# ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் இலங்கை அணி தென்கொரியா விஜயம்

தென் கொரியாவின் குமி விளையாட்டரங்கில் இம் மாதம் 27ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ள 26 ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கையிலிருந்து 13 வீரர்களும் 7 வீராங்கனைகளும் பங்குபற்றவுள்ளனர்.

ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில்பங்குபற்றவுள்ளஇலங்கை அணியினர் தென்கொரியா நோக்கி நாளை சனிக்கிழமை பயணமாகவுள்ளனர்.

இலங்கை ஆடவர் அணிக்கு சுமேத ரணசிங்க தலைவராகவும் மகளிர் அணிக்கு நடீஷா டில்ஹானிலெகம்கே தலைவியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் வரலாற்றில் 22 தங்கப் பதக்கங்கள் உட்பட 66 பதக்கங்களை மொத்தமாக வென்றுள்ள இலங்கை, இம்முறையும் சில பதக்கங்களைவென்றெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாங்கொக்கில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற 25 ஆவது ஆசிய சம்பியன்ஷிப் மெய்வல்லுநர் போட்டியில் தருஷி கருணாரட்ன (800 மீற்றர்), நடீஷா ராமநாயக்க (400 மீற்றர்), 4 x 400 மீற்றர் தொடர் ஓட்ட அணியினர் ஆகியோர் இலங்கைக்கு 3 தங்கப் பதக்கங்களை வென்று கொடுத்திருந்தனர்.

அத்துடன் 2 வெள்ளிப் பதக்கங்களும் 3 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தம் 8 பதக்கங்கள் இலங்கைக்கு கிடைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-3-8)




பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாணி மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உளவியல் சிறப்புப்பட்டம், மருந்தாக்கவியல் சிறப்புப் பட்டம், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானிமானி சிறப்புப்பட்டம், தாதியியல்மானி சிறப்புப் பட்டம் ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 223 374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# புதிய நீரிணைப்புக்கள் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புதிய நீரிணைப்புக்கள் வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாணம் , கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் புதிய நீரிணைப்புக்கள் வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றதற்கமைய, இச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட தேவைப்பாடுடைய பயனாளிகளுக்குப் புதிய இலவச நீரிணைப்புக்கள் வழங்குவதற்காக பிரதேச செயலாளர்களுடன் இத் தேவைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க அதிபரால் ஆராயப்பட்டது.

முதற்கட்டமாக தெல்லிப்பளை பிரதேசசெயலாளர் பிரிவில் காணப்படும் நீரிணைப்பிலிருந்து புதிதாக புதிய இணைப்புக்களை விஸ்தரிப்பதற்கும், தாழையடி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கரவெட்டி, கோப்பாய் , சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இலவச நீர் விநியோகம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக இவ் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் 500 பயனாளிகளைத் தெரிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (நி)

# மே மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு

(கொழும்பு)

மே மாதத்திற்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

14 இலட்சம் அஸ்வெசும பயனாளி குடும்பங்களுக்காக, அரசாங்கம் 11 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளது.

அதன்படி, அஸ்வெசும நலன்புரி திட்டத்தைப் பெறும் பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகளின் மூலம் மே மாதத்திற்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (நி)

# உலக மூளை ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு நடைபவனி

(யாழ்ப்பாணம்)

உலக மூளை ஆரோக்கிய தினம் ஜூலை 22 ஆம் திகதி ஆகும். குறித்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்திலே தடகள விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

பக்கவாதம் சம்பந்தமான தனிப்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒரு நடைபவனியும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்தியிலிருந்து நடைபவனி ஆரம்பித்து துரையப்பா விளையாட்டரங்கில் முடிவடையும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கையாக பாவனைக்குட்படுத்த முடியாத ஒரு தொகுதி பொருட்கள் எதிர்வரும் 26 திகதி மு.ப 10 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

பொருட்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிட முடியும் என கிளிநொச்சி பிராந் திய சுகாதார வேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## கல்விக் கண்காட்சியும் சிறுவர் சந்தை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் 2025 ஆம் ஆண்டிற்கான கல்விக் கண்காட்சியும் சிறுவர் சந்தை நிகழ்வும் இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு கலைவாணி முன்பள்ளியில் தலைவர் சி.இளங்கோவின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய ஆசிரியர் திருமதி.க. குணநிதி, சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட இணைப்பாளர் செல்வி.ப.நாகேஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கலைவாணி முன்பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

## செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் குரு பூசை நிகழ்வில் அபிஷேகம், திருமுறை மற்றும் நற்சிந்தனை ஓதலைத் தொடர்ந்து, திருமுறை பெருமை பற்றி கலைமாமணி, கலா பூசணம் சிவஸ்ரீ கதிர் குமாரசுவாமி சுமுகலிங்க குருக்களின் உரையும் இடம்பெறவுள்ளது. (3-8)

## மிருசுவில்- பழையவாய்க்கால் புனித வேளாங்கன்னி அன்னை ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பழைய வாய்க்கால் புனித வேளாங்கன்னி ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று 30 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு நற் கருணை விழாவும், 31 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறும் எனப் பங்குத் தந்தை S.J.Q ஜெயரஞ்சன் அடிகளார் அறிவித்துள்ளார். (நி-8)


அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2025
சிலப்பதிகார விழா

இடம்
அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.
காலம் - 2025 மே
23, 24, 25 - மாலை 4 மணி

இன்றைய நிகழ்வுகள்
23.05.2025 வெள்ளி
மாலை 4.00 மணி
தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் அரங்கு

வரவேற்பு நடனம்
கி.துஷாணிக்கா, சி.அபிசன்யா,
உ.விதுர்ஷிகா, கோ.ரதீஷனா, த.சர்மிகா
(நெறியாள்கை, நாட்டியத்திலகம் திருமதி.கவிதா ஞானதயாளன்)

மங்கல விளக்கேற்றல்
திரு.திருமதி சுகுமாரன் அன்புமலர் தம்பதிகள்
திரு.திருமதி விஷ்வப்பிரம்மஸ்ரீ
கலாநிதி கோபாலகிருஸ்ணன் காயத்திரி தம்பதிகள்

கடவுள் வாழ்த்து
செல்வி தர்சிகா கிருஸ்ணாகரன்

கழகக்கீதம்

ஆசியுரை
கவிதா சிரோமணி சிவசக்திஸ்ரீ
கலாநிதி ஸ்ரீராம்தேவலோகேஸ்வரக் குருக்கள்
(ஸ்ரீ சாரதாபீடம், துன்னாலை)

வாழ்த்துரை
திருமதி. கிருஷ்ணலதா குலசங்கர்
(அதிபர். யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

வரவேற்புரை
திரு. ம. பகீரதன்

தலைமையுரை
திரு. இ. இராஜேஸ்கண்ணன்
(முதுநிலை விரிவுரையாளர், சமூகவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை
திரு.த. அஜந்தகுமார்
(விரிவுரையாளர். தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவிப்புரை
திரு.சி.இலம்போதரன்

நன்றியுரை
செல்வன்.செ.சரண்

நிகழ்ச்சித்தொகுப்பு
பரா.றமேஸ்

விவாத அரங்கு
நடுவர் :- திருமதி. கோசலை மதன்
(தலைவர், சட்டத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
"எமது தேசத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் தேவையானது"

| உயர்ந்த அறமே | தெளிந்த அறிவே |
|---|---|
| அ.யூ.செ.லெம்பேட் | சு. இமயராஜ் |
| த.குருபரன் | க.பிரகான் |

பட்டிமண்டபம்
"இளங்கோவடிகள் தன் காப்பியத்தினுள் பெரிதும் வலியுறுத்தும் பாவிகச் செய்தி"
நடுவர் : கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்



"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"
வலம்புரி ந.விஜயசுந்தரம், ச.அன்ரனி
"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்"
செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், க.வாணி முகுந்தன்
"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், சி.குமரேசன்

விருதுபெறும் சான்றோர்

திருமதி.வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்ட கலைஞான சேகரி க.பரஞ்சோதி ஞாபகார்த்த புலமை ஒலி உயர் விருது பெறுபவர்
பேராசிரியர்.அ.சண்முகதாஸ்

விநாயகம் கிருஷ்ணகாந்தன் அவர்களால் நிறுவப்பட்ட வீரகத்திப்பிள்ளை விநாயகம் ஞாபகார்த்த கல்விப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
திரு.சின்னையா சிவராசா
(ஓய்வுநிலை மேலதிக மாகணக் கல்விப் பணிப்பாளர்)
(வடக்குக் கிழக்கு மாகாணம்)

வேலுப்பிள்ளை மனோகரன் அவர்களால் நிறுவப்பட்ட இலக்கியப் பணிக்கான உயர் விருது பெறுபவர்
கலைவாரிதி புலோலியூர்
செ.கந்தசாமி (மூத்த சிறுகதை ஆசிரியர்)

(c-3020)

விழா சிறப்புற வாழ்த்துவோர்
போஸ்ற் மாஸ்ரர் கணபதிப்பிள்ளை குடும்பம்
மூச்சம்பலம் பரமு - தங்கம் குடும்பம்


# சிரஞ்சீவி சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊரெழு பூரண நிலையத்தின் ஏற்பாட்டில் "சிரஞ்சீவி" சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள ஊரெழு கிழக்கு பூரண நிலையத்தில் ஓய்வுநிலை அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளதுடன் சஞ்சிகை ஆய்வினை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். (நி-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## உயர்திரு.செல்லையா இளங்கோ அவர்களின் பணி நயப்பு சிறப்பு இதழ்- 23.05.2025



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

கல்விக் குடும்பத்தில் பிறந்தவர் திரு.செல்லையா இளங்கோ அவர்கள் சிறந்த கல்விப் பணியாற்றி ஓய்வு பெறுவது அறிந்து வாழ்த்துகிறேன். ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆக அரும்பணி ஆற்றிய சேவையாளனைக் கல்விச் சமூகம் வாழ்த்துவது கண்டு ஆனந்தம் அடைகிறேன். மணி விழா நாயகன் மனநிறைவோடு தொடர்ந்து நிறைவாக வாழத் துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**



### அளப்பரிய பணியாளன்

திரு.செல்லையா இளங்கோ அவர்கள் ஓய்வு பெறுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கிளி/அக்கராயன் ம.வி இல் தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்து ஆசிரியராக,பிரதி அதிபராக , அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை.

இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் விஞ்ஞான பாடத்தினைக் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தவர். அதே போன்று அதிபராகக் கடமையாற்றிய போது அவர் பாடசாலை மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்துவதிலும் பாடசாலையினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதிலும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தீவகக் கல்வி வலயத்தில் அரும்பணியாற்றி ஓய்வில் செல்லும் இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.உதயகுமார்,**
**ஓய்வு நிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**



### நேர்மையாக பணியாற்றியவர்

திரு.செ.இளங்கோ அவர்களின் 60 ஆவது அகவை நிறைவில் அவரை மன நிறைவுடன் வாழ்த்துகிறேன்.

அவரது 38 வருட கல்விச்சேவையில் தான் பணிபுரிந்த எல்லா நிறுவனங்களிலும் எல்லாப் பதவிகளிலும் தனது ஆக்கதிறன் . புத்தாக்கச் சிந்தனை என்பவற்றை புகுத்தியவர். அவர் கடந்து வந்த பாதைகள் மிகவும் கடினமானவை, சிக்கலானவை அவ்வாறான சந்தர்ப்பங்களில் சவால்களைத் துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி கண்ட உழைப்பாளி. நீண்ட காலத்தின் பின்னர் யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியைத் தூக்கி நிறுத்தியவர். மாற்றங்களை ஏற்படுத்துவதில் துணிச்சல் மிக்கவர்.

தனது பணியை விஞ்ஞான ஆசிரியராக ஆரம்பித்துப் பின்னர் அதிபராகி, பிரதிக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெறுகின்றார். அவருக்குப் பதவி உயர்வுகள் தாமாகவே வந்து அடைந்தன. அவரது ஆளுமையால் அப் பதவிகளுக்கு பெருமை சேர்த்தவர். அவரது நேர்மையும் ஒழுக்கமும் சவாலுக்கு உட்படுத்த முடியாதவை. அவர் மட்டுமல்ல அவரது துணைவியாரும் பிள்ளைகளும் அப்பழுக்கற்றவர்கள். அவர் எனக்கு நண்பனாக இருப்பதையிட்டு பெருமையும் பெருமிதமும் கொள்கின்றேன். அவர் குடும்பத்துடன் மேன்மை பெற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா,**
**ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



### திறன்களால் உயர்ந்த மனிதன்

திரு.செல்லையா இளங்கோ அவர்கள் எந்தப் பாடசாலையில் கடமையிலிருந்தாலும் கற்பித்தல் நுட்பங்களால். செயற்றிறன்களால் பாடசாலையின் ஆசிரியர்கள் அனைவருக்கும் தலைமகனாக விளங்கியது வரலாற்று உண்மை. எந்த மாவட்டத்தில் கடமையாற்றுகின்றாரோ, அந்த மாவட்டக் கல்வி அபிவிருத்தியின் தலைவன் என்றே கூறுவேன்.

யாழ்ப்பாணத்திற்கு நான் இடம்மாற்றத்தில் வரும் போது கொக்குவில் இந்துவின் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

2009 இல் நிர்வாகப் பொறுப்புக்கு இளங்கோ அவர்கள் அதிபர் சேவையில் பொறுப்பேற்றதும் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு நிர்வாகக் கட்டமைப்பு அமுலாக்கத்திற்கு ஒரு உதாரண புருஷனாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக 2022 இல் பொறுப்பேற்கும் வரை திகழ்ந்தவர். சேவையில் உயர்ந்த இளங்கோ அவர்களின் குழந்தைகள் கல்வியால் உயர்ந்து அப்பா, அம்மாவுக்கு மிகுந்த சந்தோஷமளித்துள்ளனர். அதுவே இளங்கோ குடும்பத்தின் உயரிய சேவையை இறைவன் ஏற்றுக் கொண்டுவிட்டான் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். வாழ்க வளமுடன்.

**சி. மாணிக்கராஜா, ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். கல்விவலயம்.**



### திரு.செல்லையா இளங்கோ
### பிரதிக் கல்வி பணிப்பாளர்,
### வலயக்கல்வி அலுவலகம் தீவகம்

வரலாற்றுச்சுவடுகள்

1.பிறந்த திகதி- 23.05.1965
2.தந்தையின் பெயர்- திரு கதிரேசு செல்லையா
3.தாயின் பெயர்- திருமதி நாகம்மா செல்லையா
4.துணைவியாரின் பெயர்-திருமதி லதாவாணி இளங்கோ, ஆசிரியர் (யா/இராமநாதன் கல்லூரி)
5.பிள்ளைகள்-
இ.அபிநயன் Product Manager, Hemsons
இ.ஆரதி Medical Faculty, Jaffna
இ.இளங்கீதன் Medical Faculty,Jayewardenapura
6. ஆரம்பக் கல்வி- கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்
இடைநிலை, உயர்தர கல்வி
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1976-1984)
7.தகைமைகள்-பயிற்றப்பட்ட ஆசிரியர்,விஞ்ஞானம், பலாலி ஆசிரியர் கலாசாலை (1990/1991)

- B.A யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- PGDE யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- PGDEM தேசிய கல்வி நிறுவகம்
- M.Ed(Hons) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

8.கல்விச்சேவையில் 38 வருடங்கள்,

- முதல் நியமனம்-14.12.1987- ஆசிரியராக கிளி/அக்கராயன் ம.வி.(1987-1993)
- பிரதிஅதிபராக- கிளி/அக்கராயன் ம.வி.(1994-1997)
- வளநிலையம்,வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி (1998-1999)
- ஆசிரியராக-யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தி(1999)
  யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (1999-2009)
- அதிபராக யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி (2009-2010)
  யா/பெரியபுலம் ம.வித்தி(2011-2013)
  யா/கனகரத்தினம் மத்திய ம.வி.(ஸ்ரான்லி)(2013-2015)
  யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி (2015-2020)
  யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (2020-2024)
- இலங்கை கல்வி நிர்வாக சேவையில் (SLEAS)
  முதல் நியமனம்- (26.03.2022)
- பிரதி கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி),
  தீவக கல்வி வலயம்(2024-2025)

### நண்பர்களின் உள்ளத்தில் இருந்து...

இலங்கைத்தீவின் புகழ்பூத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாகிய திரு.செல்லையா இளங்கோ அவர்கள் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரும், கலைப்பட்டதாரியுமாவார். 1987ஆம் ஆண்டு விஞ்ஞான பாட ஆசிரியராக நியமனம் பெற்ற நாள் முதல் விஞ்ஞானபாடத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவராய் மாணவர்களின் மனங்களில் அறிவியல் உண்மைகளை இலகுவாகப் புரியவைக்கும் ஆற்றல் மிகு ஆசானாய் விளங்கினார். மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை விரும்பிக் கற்க வேண்டும் என்பதற்காகச் செயற்பாட்டு அடிப்படையிலான கற்பித்தலை ஒழுங்கமைத்துத் திட்டமிட்டு நடத்தும் சிந்தனையாளராவார். தான் சார்ந்த சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற வேணவா கொண்டவராகவும் விளங்கினார். தனது சேவையை வினைத்திறனாகச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன் கருமமாற்றுவதால் அதற்காக ஐந்து வருடங்கள் மட்டுமே ஒரு பாடசாலையில் கடமையாற்றுவார்.

முப்பத்தெட்டு (38) வருட அரச சேவையில் ஆசிரியராக உதவி அதிபராக, அதிபராக, பிரதிக் கல்விப்பணிப்பாளராகத் தனது பணியைத் திறம்பட ஆற்றி 23.05.2025 இன்றுடன் மணிவிழாக் காணும் எமது நண்பனின் ஓய்வுக்காலம் சிறக்க இறையாசி வேண்டியும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கிறோம்.

**நண்பர்கள்**



### ஆளுமை மிக்க தலைமை

மாணவர்களின் அறிவு, ஆளுமை, தலைமைத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும் என்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்ட திருவாளர் இளங்கோ அவர்களது மாணவர்கள் பற்றிய அக்கறை அவர் அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய காலங்களில் அவதானிக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. 1987 இல் ஆசிரியராக அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆசிரிய பணியை ஆரம்பித்த அவர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானத்துறையில் பயிற்சியினைப் பெற்று, தொடர்ந்து தன் ஆசிரியப் பணியினை திறம்பட மேற்கொண்டு 2009 முதல் அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டார். ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் அதிபர் பணியினை ஆரம்பித்து யாழ்.மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகள் பலவற்றில் தன் பணியைத் தொடர்ந்தார். தேசிய பாடசாலையாகிய மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அவர் பணியாற்றிய காலத்தில் பல்வேறுபட்ட துறைகளில் பல மாற்றங்களை நிகழ்த்தியிருந்தார். அதன் பின்னர் அவரது தகைமைகள், சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்டு தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக அர்ப்பணிப்புடன் பணியாற்றிவருகிறார். அன்பு, அர்ப்பணிப்பு, ஆளுமை ஆகியவற்றை ஆயுதங்களாகக் கொண்டு கல்வி உலகை வெற்றி கொண்ட திருவாளர் இளங்கோ அவர்களின் வாழ்வு சிறப்புற வாழ்த்துகிறேன்.

**க.ஜெ.பிறட்லி,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**



### பல்துறை ஆற்றல் மிக்கவர்

திரு. செல்லையா இளங்கோ அவர்கள் தமது 38 ஆண்டுகள் அரச சேவையைப் பூர்த்தி செய்து 23.05.2025 அன்று ஓய்வு பெறுகின்றார்.

14.12.1987 இல் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசியராக முதல் நியமனம் பெற்று பின்ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த பின்னரும் அங்கேயே சென்று கடமையாற்றினார். அதன் பின்னர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியராகவும் கடமையாற்றி இலங்கை அதிபர் சேவைக்கு பதவி உயர்வு கிடைக்கப்பெற்று யா/கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை, யா/பெரியபுலம் மகாவித்தியாலயம், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலும் தேசிய பாடசாலையான யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் சிறப்பாக நிர்வாகப் பணிகளையும் இணைப் பாடவிதான செயற்பாடுகளையும் முன்னெடுத்தார். 2015 இல் இலங்கை அதிபர் சேவை I இற்குப் பதவி உயர்வு பெற்ற இவர் திறமை அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவை III இற்கு பதவி உயர்வினை 26.03.2022 இல் இருந்து பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் தீவகக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக (கல்வி அபிவிருத்தி) கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். சிறப்பாகத் தான் கடமையாற்றிய அலுவலகங்களில் 5"S" நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெற்றிருந்தார்.

இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் மனைவி , பிள்ளைகள், உறவினர்களுடன் மகிழ்வாக வாழவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றேன்.

**திருஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்-தீவக வலயம்.**



### பல்துறையிலும் சிறந்து விளங்கிய கல்விப்பண்பாளன்.

மணிவிழா நாயகனாம் செல்லையா இளங்கோ ஆரம்பகாலத்தில் ஆசிரியராய் கல்விச் சேவையில் இணைந்து அதிபராய்,பிரதி கல்விப் பணிப்பாளராய் பல பதவி உயர்வுகள் பெற்றுச் சாதனை நிலைநாட்டியவர். இவர் பல ஆளுமைமிக்க மாணவர்களையும் செயற்றிறன் மிக்க ஆசிரியர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

இவரின் நல்லெண்ணங்களின் மூலம் உதித்தவையே மகிழ்வான இல்லம், சிறந்த கல்வியறிவான குழந்தைகள் என்பனவாம். கல்விப் பண்பாளன் தன்னகத்தே உண்மை, நேர்மை, விடாமுயற்சி, கடின உழைப்பு போன்றவற்றை தன் அணிகலன்களாக கொண்டுள்ளார். எனது அன்பு நண்பன் தரணியிலே தலைபுகழாய், தம்பதியராய், தந்தையாய் இல்லறத் திலே நல்லறம் கண்டு நூற்றாண்டு காலம் வாழவாழ்த்துகின்றேன்.

**கனகசபாபதி சுதேசன், விரிவுரையாளர்,**
**கணிதத்துறை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடம், தேசிய கல்வி நிறுவகம், மகரகம.**



### உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

கற்போர் அனைவரும் உயர்ந்திட வேண்டுமென்ற தூய உள்ளத்தோடும் அனைவரும் கற்றலில் சிறக்கவேண்டும். வாழ்வில் உயர்வடைய வேண்டும் என்று தனது பணி ஓய்வுக்காலம் வரை உயர் ஆற்றலோடு பணியாற்றி 23.05.2025 இன்று பணி ஓய்வு பெறும் எம் பெரு மதிப்பிற்குரியஆசானும் விஞ்ஞானப்பாடத்துறை ஆளுமையும் சிறந்த கல்வித்துறை நிர்வாகியுமான எங்கள் ஆசான் உயர்திரு செல்லையா இளங்கோ அவர்களை வாழ்த்துவதில் அவரின் மாணவனாக மிகவும் மகிழ்வடைகின்றேன்.

கடும் போர்ச் சூழலில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள அக்கராயன் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராக பணியாற்றியவர். அன்றைய பொழுதுகளில் எம்மை கண்டிப்புடனும் அன்புடனும் அரவணைத்து விஞ்ஞானம் கற்பித்து சொல்லிலும் செயலிலும் அழகும் நேர்த்தியும் கொண்டு வழிகாட்டி நின்ற ஆசிரியப் பெருந்தகை எங்கள் ஆசான் அவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**சு.பிரசாந்தன், அதிபர்,**
**அரசினர் ஆசிரியர் கலாசாலை, கொட்டகலை.**

**25.05.2025 சனிக்கிழமை அன்று நடாத்துவத[illegible] பணி நயப்பு விழா**
**தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்[illegible] விழா ஏற்பாட்டுக்குழு** (சி-3021)

## வாழ்த்துவோர்: நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானுடனான மோதலைத் தொடர்ந்து

# மத்திய கிழக்கு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும் இந்தியா

**(டில்லி)** • • • • • • • • • • • • • • • • • • •

**பாகிஸ்தானுடனான மோதலைத் தொடர்ந்து இந்திய அரசு மத்திய கிழக்கு நாடுகளுடன் தனது பொருளாதார உறவுகளை ஆழப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் தனது பழைய நட்பு நாடான ஓமானுடன் விரைவில் ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத் திடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தியா - ஓமான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் கிட்டத்தட்ட நிறைவடைந்து விட்டன எனவும் மேலும், இந்த மாதமே அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டார் போன்ற பிற வளைகுடா நாடுகளுடன் இதேபோன்ற ஒப்பந்தங்களை இந்தியா தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இந்தியாவின் முக்கிய இறக்குமதிகளில் பெற்றோலியப் பொருட்கள் மற்றும் யூரியா ஆகும். இவை இறக்குமதி செலவில் **70%** இற்கும் அதிகமாகும்.

அதேபோல் கட்டாருடன் 14,500 கோடி ரூபாய் ஏற்றுமதியும், ஒரு லட்சத்து ஐந்தாயிரம் கோடி இறக்குமதியும் செய்கிறது.

இந்தியா கட்டாரிலிருந்து மிகப்பெரிய அளவில்திரவமயமான இயற்கை வாயுவை இறக்குமதி செய்கிறது.

இது இந்தியாவின் சக்தி தேவையைப் பூர்த்தி செய்ய முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வாயுவுடன் சேர்த்து, கச்சா எண்ணெய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற எரிபொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து அதிக அளவில் தங்கம் மற்றும், அலங்கரிக்கப்பட்ட நகைகள், வைரங்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றது.

கடந்த பெப்ரவரியில் இந்தியாவுக்கு வருகை தந்த கட்டாரின் அமிர் இந்தியாவில் பெரிய முதலீடுகளைச் செய்ய விரும்புவதாக தெரிவித்தார். இந்தியா - பாகிஸ்தான் மோதலின் போது கட்டார் நடுநிலை வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)



## இந்தியாவில் 106 பேருக்கு கொரோனா தொற்று!



(டில்லி)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் கொரோனா பாதிப்பு காரணமாக 52 பேர் சிகிச்சை பெற்று வருதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் மகாராஷ்டிராவில் கொவிட் - 19 பாதிப்பு காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் ஜனவரி மாதம் முதல் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்படுக்கின்றது.

இவற்றில் 101 பேர் மும்பையைச் சேர்ந்தவர்கள் எனவும் மீதமுள்ளவர்கள் புனே, தானே மற்றும் கோலாப்பூரைச் சேர்ந்தவர்கள் எனவும் அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்தியாவில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இந்தியாவின் ரத்தத்துடன் விளையாடினால் விளைவு விபரீதமாகும் - பிரதமர் மோடி

(டில்லி)

பாகிஸ்தானுடன் வர்த்தகமும் இல்லை. பேச்சுவார்த்தையும் இல்லை" என பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், பிகானீர் மாவட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: கர்ணி மாதாவின் ஆசிர்வாதம் பெற்ற பிறகு நான் இங்கு வந்துள்ளேன். ரூ.26,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன்.

இந்த சந்தர்ப்பத்தில் [illegible]

பாகிஸ்தானுக்கு நாம் பதிலடி கொடுத்து இருக்கிறோம். பாகிஸ்தானுடன் வர்த்தகமும் இல்லை. பேச்சுவார்த்தையும் இல்லை. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்து மட்டும் பேச்சுவார்த்தை இருக்கும்.

இந்தியாவுக்கு எதிரான நேரடி போரில் பாகிஸ்தானால் ஒரு போதும் வெற்றி பெற முடியாது.



இந்தியாவுக்கு சொந்தமான தண்ணீரை பாகிஸ்தானால் பெறமுடியாது.

பாகிஸ்தான் 9 பயங்கரவாதி முகாம்களை வெறும் 22 நிமிடத்தில் அழித்து இருக்கிறோம். நமது முப்படைகளின் சக்கரவியூகத்தால் பாகிஸ்தான் மண்டியிட்டுள்ளது.

இந்தியர்களின் ரத்தத்துடன் விளையாடுவதற்கு பாகிஸ்தான் பெரும் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு பயங்கரவாதத் தாக்குதலுக்கும் இந்தியப் பாதுகாப்பு படையினர் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை நிரூபித்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# விண்வெளியில் ஆயுதத்தை நிலைநிறுத்தும் அமெரிக்கா

## பாதுகாப்பின் உச்சத்திற்கு சென்ற ட்ரம்ப்



**(வோஷிங்டன்)**

**"கோல்டன் டோம்" என்று அழைக்கப்படும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புக்கான தனது திட்டம் குறித்த புதிய விபரங்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**



குறித்த திட்டத்திற்கு மொத்தம் சுமார் $175 பில்லியன் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

"கோல்டன் டோம்" என்பது அமெரிக்கா விண்வெளியில் வைக்கும் முதல் ஆயுதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"கோல்டன் டோம்" என்பது தரை மற்றும் விண்வெளி அடிப்படையிலான ஏவுகணை கேடய அமைப்பாகும், இது ஏவுகணைகளை பல கட்டங்களில் கண்டறிந்து, கண்காணித்து நிறுத்தவும் புறப்படுவதற்கு முன் அவற்றை அழிக்க அல்லது நடுவானில் இடைமறிக்கும் திறனைக் கொண்டது.

இந்தப் புதிய அமைப்பு அமெரிக்காவின் வெற்றிக்கும் உயிர்வாழ்விற்கும் மிகவும் முக்கியமானது என்று கூறிய ட்ரம்ப், அது முழுமையாக கட்டமைக்கப்பட்டவுடன், உலகின் பிற பக்கங்களிலிருந்து ஏவப்பட்டாலும், விண்வெளியில் இருந்து ஏவப்பட்டாலும் கூட, ஏவுகணைகளை இடைமறிக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த ஆயுத அமைப்பு தனது பதவிக் காலம் முடிவதற்குள் சுமார் மூன்று ஆண்டுகளில் செயற்பாட்டுக்கு வரும் எனவும் ஜனாதிபதி ட்ரம்ப குறிப்பிட்டுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில், கோல்டன் டோம் திட்டம் இஸ்ரேலின் அயன் டோம் திட்டத்தை அடிப்படையாக வைத்து அமைக்கப்படவுள்ளதாக சர்வதேச தரப்புகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனத்தை இஸ்ரேல் தாக்குவதை எதிர்த்து ஈரான், ஏமன், லெபனான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து எதிர் தாக்குதல்கள் நடக்கின்ற நிலையில், அங்கிருந்து ஏவப்படும் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்க இஸ்ரேலின் பல அடுக்கு பாதுகாப்புகள் கொண்ட அமைப்பு "அயன் டோம்" ஆகும். (நி-8)

# இது நம்ம லிஸ்டிலேயே இல்லையே...

# பாகிஸ்தானுக்கு சலுகையுடன் போர் விமானங்களை அனுப்பும் சீனா

(பீஜிங்)

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் முதல் முப்பது J-35A ஜெட் விமானங்களைப் பெறவுள்ளது.

ரஃபேல் போர் விமானங்களுக்கு எதிராக சீனாவின் J-10 போர் விமானங்களை பாகிஸ்தான் பயன்படுத்தியது.

இந்தியா-பாகிஸ்தான் மோதலைத் தொடர்ந்து, சீனா தனது ஐந்தாம் தலைமுறை J-35A போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் முதல் முப்பது J-35A ஜெட் விமானங்களைப் பெற உள்ளது. பாகிஸ்தானுக்கு சீனா தனது போர் விமானங்களை 50% தள்ளுபடியை வழங்கியுள்ளதுடன், எளிதாக கட்டணம் செலுத்தும் சலுகைகளையும் வழங்கியுள்ளது எனக் கூறப்படுகிறது.

முன்னதாக மோதலில் இந்தியாவின் ரஃபேல் போர் விமானங்களுக்கு எதிராக சீனாவின் J-10 போர் விமானங்களை பாகிஸ்தான் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (நி-8)




# வோஷிங்டனில் துப்பாக்கிச்சூடு

## இஸ்ரேலிய தூதரக ஊழியர் இருவர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

வோஷிங்டன் டிசி நகர மையத்தில் அமைந்துள்ள ஒரு யூத அருங்காட்சியகத்திற்கு வெளியே இரண்டு இஸ்ரேலிய தூதரக ஊழியர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம் தெரிவித்துள்ளார்.

தலைநகர் யூத அருங்காட்சியகத்தில் நடந்த ஒரு நிகழ்விலிருந்து வெளியேறும் போது பாதிக்கப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் சுட்டுக் கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்தத் தாக்குதல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாக சந்தேகிக்கப்படுகின்றது.

அந் நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9:05 மணிக்கு எஃப் தெருக் வடமேற்கில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இது ஏராளமான சுற்றுலாத் தளங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் அரசு கட்டடங்களைக் கொண்ட பகுதி. துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் இஸ்ரேலிய தூதரகத்தின் பல ஊழியர்கள் ஒரு அருங்காட்சியக நிகழ்வில் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரிக்கும் குற்றச்செயல்கள்

# கண்டறிய விசேட திட்டம்

(கொழும்பு)

அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் உட்பட பல குற்றச் செயல்கள் பதிவாகும் தென் மாகாணத்தில், அவ்வாறான குற்றச் செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக விசேட அறிவியல் ஆய்வுகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை ருஹுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார். இதன்படி, பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆய்வு நடவடிக்கையின் பின்னர் அவ்வாறான குற்றங்களுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, அவற்றைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (நி)

# ‘நீரிழிவு நோய்’ நூல் வெளியீடு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய "நீரிழிவு நோய்" நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பொது வைத்திய நிபுணர் த. சத்திய மூர்த்தி தலைமையில் இடம்பெறும். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L.கமம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15501 | பிறப்பு: 1993-இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா- 6 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Dip in IT, Banker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15502 |
| பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா-54 1/2<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்-O/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15503 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>7இல்செவ்<br>கி.பா-15 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA, Senior Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15506 |
| பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா-14<br>12இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15504 | பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா-52 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma Course, Director(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15507 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா-16<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BBA,பயிற்சி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: B/15505 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>7இல் செவ்<br>கி.பா-51<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15508 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc(QS), Pvt work<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15509 | பிறப்பு: 1999-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் -Managemant, Accountant(pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor<br>தொ.இ: G/15513 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 377



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பார்வை

ஒரு தெருவிலே சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ ஒரு உயரமான கல்லை நடுத்தெருவிலே வைத்து அதை சுத்தி சுத்தி ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அது என்ன விளையாட்டோ அவர்களுக்கே வெளிச்சம்.

கொஞ்ச நேரம் அப்படி விளையாடிக்கொண்டிருந்தார்கள். விளையாடி முடித்ததும். அந்த கல்லை நடுத்தெருவிலே அப்படியே விட்டுவிட்டு அவரவர்கள் வீட்டிற்க்கு ஓடிப் போய்விட்டார்கள்.

அதன்பிறகு அந்த வழியாக இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். பேச்சு சுவாரஸ்யத்திலே நடுத்தெருவிலே இருந்த அந்தக் கல்லை கவனிக்கவில்லை. காலில் இடித்துவிட்டுது. இரத்தம் வந்தது! வலி தாங்கமுடியவில்லை. காலில் இடிபட்ட பெண் திட்ட ஆரம்பித்தார்.

வர வர ஊர் உலகம் ரொம்ப கெட்டுப் போய் விட்டது யாருக்கும் பொறுப்பே கிடையாது. பார், இப்படி நடுத்தெருவிலே பொறுப்பில்லாமல் இந்தக் கல்லை போட்டு வைத்திருக்கிறார்களே! இது நியாயமா? இப்படி கடுமையாக இந்த சமூகத்தை விமர்சனம் செய்து கொண்டே பெண் போய் விட்டார்.

சிறிது நேரம் கழித்து ஒரு வாலிபன் அந்த வழியாக வந்தான் அந்தக் கல்லைப் பார்த்தான். நின்றான். ஒரு நிமிடம் யோசித்தான்.

என்ன செய்யலாம் என்று பார்த்தான். தன்னுடைய வீரத்தையும் பலத்தையும் காட்ட வேண்டும் என்று நினைத்தான் கொஞ்சம் பின்னால் போனான், வேகமாக ஓடிவந்து ஒரு "ஹைஜம்ப்" அப்படியே தாண்டி அந்தப் பக்கம் குதித்து விசிலடித்துக்கொண்டே போய் விட்டான்.

அடுத்தப்படியாக ஒரு காதல் ஜோடி அந்த வழியாக வந்தார்கள். நடுத்தெருவிலே கல் கண்ணிலே பட்டது. அவர்கள் இரண்டு பேரும் மிகவும் நெருக்கமாக சேர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். நடுவிலே கல் இருப்பதாலே சிறிது நேரம் இரண்டு பேரும் விலகி மறுபடியும் இந்தப் பக்கம் வந்து சேர்ந்து போனார்கள்.

சிறிது நேரம் நாம் பிரிய வேண்டியிருக்கிறதே. அப்படி என்று வருத்தத்தோடு முணுமுணுத்துக் கொண்டே இந்தப் பக்கம் வந்தார்கள். அதற்குப்பிறகு வழக்கம் போல சேர்ந்து அவர்கள் பாட்டுக்கு எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்து கொண்டே சென்றார்கள்.

கடைசியாக அந்த வழியாக பார்வையில்லாத ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் கையிலே வழக்கமாக வைத்திருக்கின்ற அந்த ஊன்றுகோல் கையிலே இருக்கின்ற அந்த ஊன்றுகோலாலே தனக்கு முன்னால் அப்படியும் இப்படியுமாக தட்டிப் பார்த்துக் கொண்டே அவர் மெதுவாக நடந்து வந்து கொண்டிருத்தார். வழியிலே இருக்கின்ற அந்தக் கல் தட்டுப்பட்டது. உடனே நடுத்தெருவிலே ஒரு கல் இருப்பதை அவர் புரிந்துகொண்டார். உடனே குனிந்தார். அந்தக் கல்லைத் தடவிப் பார்த்து எடுத்தார். தெரு ஓரமாகக் கொண்டு போய் போட்டார்.

அதன்பிறகு அவர் பாட்டுக்கு அவர் வழியிலே நடந்து போய் விட்டார்.

இப்போது இதன் வழியாக பலபேர் வந்தார்கள் போனார்கள் இவர்களிலே பார்வை உள்ளவர் யார்? பார்வை இல்லாதவர் யார்?

ஒரு ஆள் பார்ப்பதற்கு பெரிய மனிதன் மாதிரி தான் இருந்தார் ஒரு தெரு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். இருட்டு நேரம் வழியிலே ஒரு பெரிய கல்லு கிடந்தது

கருங்கல் பார்த்தார். சற்று நேரம் யோசித்தார். போய் தூக்கிப் பார்த்தார். மிகவும் கனமாக இருந்தது.

இன்னொருவர் சேர்ந்தால் தான் தூக்க முடியும். இவர் உடனே வீதி ஓரமாகச் சென்று ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து கொண்டார். இரண்டு பக்கமும் பார்த்துக்கொண்டிருந்தார். யாராவது வருகிறார்களா என்று சிறிது நேரத்திலே ஒருவர் வந்தார். இவருக்குத் தெரிந்தவர்.

என்னங்க இந்த நேரத்திலே இங்கே உட்கார்ந்திருக்கின்றீர்கள்? என்றார் அவர். "அதோ அந்தக் கருங்கல்!"என்று அதை சுட்டிக் காட்டினார். "ஓ அதை தூக்கி ஓரமாகப் போட வேண்டுமா? வாருங்கள் இரண்டுபேரும் தூக்கலாம்!"என்றார் வந்தவர்.

"நான் அதற்காக உட்கார்ந்திருக்கவில்லை!"என்றார் இவர். "பின்னே வேறு எதற்காக?"என்றார் அவர். "ஒரு மனிதன் கருங்கல்லிலே காலை இடித்துக்கொண்டால் எப்படித் துள்ளுவான் என்று பார்க்க வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளாக ஒரு ஆசை! அதற்காக உட்கார்ந்திருக்கின்றேன். அப்படி என்கிறார் சார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு உரமானியமாக இதுவரை 190 மில்லியன் ரூபா வைப்பில்

## கிளி.அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு சிறுபோக செய்கைக்காக அரசாங்கத்தின் உரமானியமாக இதுவரை 6200விவசாயிகளுக்கு 7600ஏக்கர் நிலப்பரப்புக்காக 190மில்லியன் ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக செய்கை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டு சிறுபோக செய்கையாக 10800 ஹெக்டேயரில் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் போதிய மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. குளங்களில் போதுமான அளவு நீர் காணப்படுகின்றது. 2025 சிறுபோக செய்கைக்காக உர மானியமாக இதுவரை 6200 விவசாயிகளுக்கு 7600 ஏக்கர் நிலப்பரப்புக்காக 190 மில்லியன் ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளது எனவும் ஏனைய விவசாயிகளுக்கு அவர்களின் விபரங்கள் சரிபார்க்கப்பட்டு கமநல சேவை நிலையங்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-316)




நிலையான விவசாயத்திற்கான டிஜிற்றல் தொழில்நுட்பங்கள் இரண்டாவது சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழக அறிவியல் நகர் கிளிநொச்சி விவசாய பீட கேட்போர் கூடத்தில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. (படம்: தேவானந்தா)

# புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற உலக தேனீ தின நிகழ்வு



(வவுனியா)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினால் காலநிலைக்கு சீர்மைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் அனுசரணையுடன் உலக தேனீ தின நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள வள்ளிபுனம் பிரதேச பொதுநோக்கு மண்டபத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது தேனீ வளர்ப்பு சம்பந்தமான கருத்தரங்கும், தேனீ வளர்ப்புக்கான தேனீப் பெட்டிகளும் வழங்கப்பட்டதனை தொடர்ந்து தேனீ வளர்ப்பு பிரதேசத்திற்கான கள விஜயமும் இடம்பெற்று தேனீ வளர்ப்பு தொடர்பாக செய்முறைகள் மூலம் தெளிவூட்டப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு மந்துவில் பிரிவின் விவசாய போதனாசிரியர் பு.பிரசாந்தன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், உதவி விவசாயப் பணிப்பாளர் மேரிஆன்சலா லக்சன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.விஜயகுமார், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் து.ஜெயந்தன் , கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் விவசாய நிபுணர் க.வசந்தன், கிராம சேவையாளர்கள் விவசாய போதனாசிரியர்கள், கிராம மக்கள் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

# அனுபவப் பகிர்வும் சாதனையாளர் கௌரவிப்பும்



(கண்டாவளை)

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் கீழுள்ள முருகானந்தா கல்லூரியில் "எப்படி வென்றோம் எவ்வாறு கற்றோம்" எனும் தொனிப் பொருளில் கடந்த உயர்தர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றவுள்ள கிளி. முருகானந்தா கல்லூரி மாணவர்களும் பங்கு கொண்ட அனுபவப் பகிர்வும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரி முதல்வர் அ.பங்கயற்செல்லன் தலைமையில் நடைபெற்றது .

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி ) நளாயினி இன்பராஜ், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர் சிவனருள்ராஜா மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரியினுடைய ஓய்வு நிலை அதிபர் கிருஷ்ணகுமார் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-315)

# மன்னாரில் ஆரம்பமானது கரப்பந்தாட்டப் போட்டி



(மன்னார்)

இராணுவத்திற்கும் பொது மக்களுக்கும் இடையில் நட்புறவை வலுப்படுத்தும் வகையில், இராணுவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கரப்பந்தாட்ட போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் இராணுவத்தின் 542 ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் தளபதி பிரிகேடியர் ஏ.ஆர்.சி.அசூரசிங்க தலைமையில் ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கும், இராணுவத்தின் இரு அணிகள் உள்ளடங்கலாக ஏழு அணிகள் கலந்து கொள்ளும் சுற்றுப்போட்டி ஆரம்பமானது.

தொடர்ச்சியாக இடம் பெறும் குறித்த போட்டியின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 4.06. 2025 அன்று இடம்பெற உள்ளது. (8-285)

## வவுனியாவில்

# யானையின் அட்டகாசத்திற்கு எதிராக மக்கள் போராட்டம்

(வவுனியா)

வவுனியா கண்ணாடிக் கணேசபுரம் கிராமத்தில் யானையின் அட்டகாசத்தினை கட்டுப்படுத்தக்கோரியும் யானை தாக்கி உயிரிழந்தவருக்கு நீதி கோரியும் அப்பகுதி மக்களினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை மதியம் முன்னெடுக்கப்பட்டது

வவுனியா கண்ணாடி கணேசபுரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்ற பொழுது வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரை தாக்கியுள்ளதுடன் சம்பவத்தில் 63 வயதுடைய சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் இறுதிக் கிரியை அவரது இல்லத்தில் இடம்பெற்ற சமயத்தில் குறித்த கிராம மக்கள் சடலத்துடன் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

இறக்கிய யானைகளை ஏற்றி அனுப்பு, உயிரை பாதுகாக்க வழி சொல், விவசாயத்தினை காப்பாற்று, அரசே காட்டு யானைக்கு ஒரு வழி சொல் போன்ற பல்வேறு வசனங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் கிராமத்தினுள் காட்டுயானைகள் மாலை நேரங்களில் வருவதுடன் தமது விவசாய நிலங்களை சேதமாக்குவதாகவும், வீதியோரங்களில் நின்று பொது மக்களை தாக்குவதாகவும் மாலை 5 மணிக்கு பின்னர் வெளியே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

முன்னைய காலத்தில் எமது கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் தற்போது வேறு பகுதிகளிலிருந்து காட்டுயானைகளை எமது கிராம எல்லைப் பகுதிகளில் விடுவதினாலேயே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் இதற்கு நிரந்தர தீர்வு கோரியும் யானை தாக்கி உயிரிழந்தவருக்கு நீதி வழங்க கோரிக்கை விடுப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் 780

## காவியத் தொடர்- பாகம் -IV





பக்கத்து வேட்டை மண்டபத்திற்குள் தடதடவென்று பலர் பிரவேசிக்கும் சத்தம் அச்சமயம் கேட்டது.

### 9 ஆம் அத்தியாயம் நாய் குரைத்தது!

மணிமேகலை வந்தியத்தேவனுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் நின்றாள். வந்தியத்தேவனும் புன்னகை புரிந்தவண்ணம் நின்றான். இந்தப் பெண்ணிடம் என்ன சொல்லி விட்டு எப்படி தப்பிச் செல்வது என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இச்சமயம் எங்கேயோ தூரத்திலிருந்து ஒரு குரல் "அம்மா! என்னை அழைத்தீர்களா?" என்று கேட்டது.

"இல்லையடி உன் வேலையைப் பார்!" என்றாள் மணிமேகலை. உடனே அவளுடைய திகைப்பு நீங்கியது.

சற்று முன் வந்தியத்தேவன் புகுந்த வந்த துவாரத்தின் அருகில் சென்று உட் பக்கத்தில் தாளையிட்டாள். பின்னர் வந்தியத்தேவனுக்குச் சமிக்ஞை காட்டி அந்த அறையிலேயே சற்றுத் தூரமாக அழைத்துச் சென்றாள். சட்டென்று திரும்பி நின்று "ஐயா! உண்மையைச் சொல்லும்! சந்திரமதி உம்மை அழைத்ததாகக் கூறினீரே, அது நிஜமா?" என்று கேட்டாள்.

"ஆம், அம்மணி!"

"எப்போது, எங்கே பார்த்து உம்மை அழைத்தாள்?"

"சற்று முன்னால்தான்! அடுத்த அறையில் நான் குரங்கின் பின்னால் மறைந்து நின்றபோது நீங்கள் இருவரும் வந்து பார்த்துவிட்டுத் திரும்பினீர்கள். நீங்கள் திரும்பிய பிறகு அவள் என்னைப் பார்த்து, 'குரங்கே! நீ என்னுடைய அறைக்கு வந்து இருக்கிறாயா? வேண்டாத சமயத்தில் வருகிறவர்களைப் பயமுறுத்தி அனுப்பச் சௌகரியமாயிருக்கும்!' என்றாள். அது தங்கள் காதில் விழவில்லை போலிருக்கிறது!"

மணிமேகலை இளநகை புரிந்தவண்ணமாக "காதில் விழுந்திருந்தால் அவளைச் சும்மா விட்டிருப்பேனா?" என்றாள்.

"இளவரசி! தங்கள் தோழி பேரில் கோபிப்பதில் பயன் என்ன? என் முகமும் வாலில்லாக் குரங்கின் முகமும் ஒன்று போலிருந்தால் அதற்குச் சந்திரமதி என்ன செய்வாள்?"

"உமது முகத்துக்கும் வாலில்லாக் குரங்கின் முகத்துக்கும் வெகு தூரம்!"

"குரங்கின் முகத்துக்கும் அதற்கு மேலே தொங்கிய ஆந்தையின் முகத்துக்கும் உள்ள தூரம் போலிருக்கிறது."

"உமது முகம் குரங்கு முகமும் அல்ல. ஆந்தை முகமும் அல்ல. ஆனால், குரங்கின் சேஷ்டையெல்லாம் உம்மிடம் இருக்கிறது. சில சமயம் ஆந்தையைப் போலவும் விழிக்கிறீர்! சற்று முன்னால் இதோ இந்தக் கண்ணாடியில் எட்டிப் பார்த்து விழித்தது நீர் தானே?"

"ஆம், இளவரசி, நான் தான்!" "எதற்காக, உடனே பின்வாங்கிக் கதவைச் சாத்திக் கொண்டீர்?"

"இந்தக் கண்ணாடியில் என் முகத்துக்கு அருகில் ஒரு தேவ கன்னிகையின் முகம் போலத் தெரிந்தது. அந்த தேவ கன்னிகை என் முகத்தைப் பார்த்துப் பயந்து கொள்ளப் போகிறாளே என்று நான் பிடித்திருந்த யானைத் தந்தத்திலிருந்து கையை எடுத்தேன் கதவு தானாகச் சாத்திக் கொண்டது."


"அந்தத் தேவ கன்னிகை யார் என்பது உங்களுக்கு தெரியுமா?" "அந்தக்கணம் எனக்குத் தெரியவில்லை பிறகு நினைத்துப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்."

(தொடரும்...)

---

# சிறுவர் அரங்கம்

## முட்டாள் வேலைக்காரன்



(நேற்றைய தொடர்ச்சி...)

"என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய்விட்டது" என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே! இப்படிச் செய்யலாமா? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய்க்கு பஞ்சம் வந்து விட்டது.

"தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய இலாபம் கிடைக்கும்!" என்று நினைத்தான் வணிகன்.

உடனே வேலைக்காரனை அழைத்து, "கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக்கூடாது!" என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான்.

இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், "இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்லவில்லையே!" என்ற சிந்தனை எழுந்தது.

"சரி, அவரையே கேட்டு விடுவோம்" என்ற எண்ணத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த தவணிகனை எழுப்பினான்.

"ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான்.

வணிகனுக்குச் சிறிது சிறிதாக உண்மை புலப்படத் தொடங்கியது. ஐயோ, "மண்ணெண்ணெய் எல்லாம் போச்சே!" என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்."

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்புக்காக காத்திருக்காதே, உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

– அப்துல்கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை உடன் விடுவியுங்கள்

வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது. அவ்வாறானதொரு தேவை அரசாங்கத்துக்கு இல்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதே கருத்தை ஏலவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் கூறியிருந்தார்.

ஜனாதிபதியும் அமைச்சரும் கூறுவதை நம் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றனர்.

ஆனால், படையினரின் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருக்கும்போது, வட பகுதியில் மீண்டும் காணி சுவீகரிப்பு இடம்பெறலாம் என்ற ஐயம் எழுவதில் தவறில்லை.

ஆக, படையினர் ஆக்கிரமித்துள்ள பொது மக்களின் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படுமென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியிருந்தார்.

மேற்படி ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

எனினும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமலே உள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், காணி சுவீகரிப்புத் தொடர்பில் வெளிவரக்கூடிய தகவல்களை மக்கள் நம்பவே செய்வர்.

இங்குதான் ஓர் உண்மையை ஜனாதிபதியும் அரசாங்கமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றுவது என்பது மிகவும் முக்கியமானது.

ஆம், இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என்ற செய்தி வெளிவரும்போது, சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் அடைகின்ற மகிழ்ச்சி என்பது வித்தியாசமானது.

நீண்டகாலமாக படையினரின் வசமிருந்த தமது சொந்தக் காணி தமக்கு மீளவும் கிடைப்பதன் மூலம் தங்களின் சீவனோபாயத்துக்குரிய விவசாயத்தை மேற்கொள்ளலாம்.

சொந்த மண்ணில் வாழலாம். வாடகைக் குடியிருப்புக்கு முடிவு கட்டலாம் எனப் பல்வேறு எதிர்பார்ப்புகள் எழுகை பெறும்.

இருந்தும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதபோது, மன விரக்தி மட்டுமே மிஞ்சுவதாக இருக்கும்.

ஆக, வாக்குறுதிகளை வழங்கிவிட்டால், அதனை எப்பாடு பட்டும் செய்தாக வேண்டும்.

ஆக, ஜனாதிபதி வழங்கிய உத்தரவாதத்தின்படி; படையினர் ஆக்கிரமித்துள்ள பொது மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும்போது அரசாங்கம் காணிகளை சுவீகரிக்கும் என்ற தகவல்களை மக்கள் நம்ப மறுப்பர்.

எனவே முதலில் ஜனாதிபதி செய்ய வேண்டியது பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதாகும்.

# கொவிட் -19 புதிய திரிபின் தாக்கம் நாட்டில் இனங்காணப்படவில்லை

## ஆயினும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் – சுகாதார அமைச்சு

(கொழும்பு)

ஆசிய நாடுகளைத் தற்போது ஆக்கிரமித்துள்ள கொவிட் - 19 புதிய திரிபு இலங்கையில் பரவும் அபாயம் இல்லை. எனவே பொது மக்கள் வீண் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஆயினும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் எனச் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

கடந்த சில வாரங்களாக பல ஆசிய நாடுகளில் கொவிட் - 19 பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு தேசியளவில் தயார்படுத்தவும் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சகம் எடுத்துள்ளது.

நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் கொவிட் - 19க்கான மருத்துவ மாதிரிகளைச் சோதிக்கும் ஒருங்கிணைந்த சுவாசக் கண்காணிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் தற்போதைய அவதானிப்பின்படி தற்போது கொவிட் - 19 பாதிப்புகளில் அதிகரிப்பு இல்லை. இலங்கையில் தொற்றுநோய் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை முன்கூட்டியே அடையாளம் காணத் தேவையான ஆய்வகக் கண்காணிப்பு அமைப்பும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

சுகாதார நடைமுறைகள் மற்றும் அடிக்கடி கை கழுவுதல், இருமல் மற்றும் தும்மும்போது மூக்கு மற்றும் வாயை மூடுதல் உள்ளிட்டவை எல்லா நேரங்களிலும் பராமரிக்கப்பட வேண்டும் என்று மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் கொவிட் - 19 திரிபுகளில் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்து வருவதால் அவர்கள் வழங்கும் தகவல்களுக்கு மட்டுமே கவனம் செலுத்துமாறு சுகாதார செயலாளர் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார். (ம-4,7)

### இலஞ்சம் பெற முயன்ற நிலையில் கைதான

## பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மறியல்

(வவுனியா)

கையூட்டல் பெற முற்பட்ட நிலையில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று அவரை மன்றில் முற்படுத்திய வேளையே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

காணிக் கொள்வனவு சம்பந்தமான பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஐந்து இலட்சம் ரூபாய் கையூட்டல்கோரிய நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

### யாழ்.பஸ்நிலைய மதகு புனரமைப்பால்

## வைரவர் கோவில் வீதி பகுதியளவில் மூடப்படும்

### மாற்று வழியை உபயோகிக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலைய மதகு புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதன் காரணமாக யாழ் நகரில் மின்சார நிலைய வீதியையும் வைத்தியசாலை வீதியையும் இணைக்கும் வைரவர் கோவில் வீதியினை பகுதியளவில் மூட யாழ்.மாநகர சபை தீர்மானித்துள்ளது.

எனவே அவ்வீதியால் செல்லும் வாகனங்கள், பயணிகள் போக்குவரத்தை சிரமமின்றி மேற்கொள்ள மாற்று வழியினைப் பயன்படுத்துமாறு யாழ்.மாநகரசபை அறிவுறுத்தியுள்ளது. (ம-4,7)

## மூன்று வயதுச் சிறுமியின் உலக சாதனை நிகழ்த்துகை

### ஞாயிறு அன்று சாவகச்சேரியில்

மூன்று வயதுச் சிறுமியான ஜெயகரன் தஸ்விகாவின் 1500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலப் பதங்களைக்கூறும் உலக சாதனை முயற்சியானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் தங்கவேலு தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வின் நடுவர்களாக சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தினர் பங்கேற்கவுள்ளனர். (ம-4,7)

### கடற்படையினர் குப்பைக்கு இட்ட தீ

## மீனவரின் வாடியை எரித்து சாம்பலாக்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் கடற்கரையை அண்மித்து அமைந்துள்ள கடற்படையினரின் கடலோரக் கண்காணிப்பு முகாமில் குப்பைகளிற்கு இட்ட தீ பரவியதில் கடற்கரையில் அமைந்திருந்த மீனவர் ஒருவரின் வாடி முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் கொட்டில்கள் சிலவும் தீக்கிரையாகியுள்ளன.

நேற்று மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த கடற்படை முகாமில் குப்பைக்கு வைத்த தீயானது பரவி கடற்படை முகாமில் நின்ற பனை மரங்களில் பற்றியுள்ளதுடன் தீ காற்றில் பரவி கடற்கரையில் வாடியமைத்து தொழில் செய்து வந்த ஒருவரின் வாடி மீது விழுந்ததில் வாடி முற்று முழுதாக எரிந்துள்ளது அதில் பெறுமதியிலான பொருட்கள் சேதம் அடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பரவிய தீ கடற்கரைப் பகுதிகளில் மீனவர்கள் அமைத்த கொட்டில்களிலும் பரவியுள்ளது. குறித்த சம்பவத்தினை அறிந்த செல்வபுரம் கடற்கரையில்நின்ற இளைஞர்கள் தீவிரமாகச் செயற்பட்டுள்ளதுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். அதே வேளை இந்தத் தீ விபத்தில் எரிகாயங்களுக்குள்ளான கடற்படையினர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-4,7)

### மின்கட்டணத்திருத்தம்

## பொது மக்களின் கருத்துக் கோரல்

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்துப் பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை இன்று (23) முதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று 23 முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பொது மக்களின் கருத்துக்கள் பெறப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

40/100



**மீன இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 11.5.2025 அன்று 4 ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். எனவே அர்த்தாஷ்டம குருவாக வருகின்றார். ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது. இருப்பினும் உங்கள் இராசி நாதனாக குரு அமைவதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

குருபகவான் உங்கள் இராசிக்கு வருடங்களாக இல்லத்தில் நடைபெறாமல் இருந்த காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதால் ஆரோக்கியம் சீராகும். ஆலயத் திருப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். குருவின் பார்வை 10ஆம் இடத்தில் பதிவதால் தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். அயல்நாடு சென்று பணிபுரிய விரும்பியவர்களுக்கு இப்பொழுது நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரலாம். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சுய ஜாதகத்தை ஒருமுறை பார்த்த பின்பு முடிவு செய்து கொள்வது நல்லது. பிள்ளைகளின் உத்தியோக முயற்சி கைகூடி வரும்.

12 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் விரயங்கள் கொஞ்சம் கூடுதலைந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பர். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும்.

10.6.2025 முதல் 7.8.2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான்




சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும், வீடு, இடம் வாங்குவதில் சில பிரச்சினைகள் வரலாம். கடன்சுமை கொஞ்சம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. பணிபுரியுமிடத்தில் மற்றவர்களைப் பற்றி விமர்சிக்க வேண்டாம்.

புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர்.

நண்பர்களின் ஆதரவோடு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டு வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். கொடுத்த கடன்கள் வசூலாகி மனதை மகிழ்விக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்குச் செவி சாய்ப்பர். பதவி உயர்வும், சம்பள உயர்வும் மனதைக் குளிர்விக்கும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனிபகவான் கும்ப இராசியில் இருந்து மீன ராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். உங்கள் இராசிக்கு வரும் சனி, ஜென்மச்சனியாக வருகின்றது. இது வாக்கிய கணித ரீதியான சனிப் பெயர்ச்சியாகும். எனவே உடல் நலத்தில் கவனம் தேவை. உற்சாகம் குறையும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. உத்தியோகம் மற்றும் தொழிலில் திடீர் மாற்றங்கள் மனக்கவலையை உருவாக்கும். நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக நடக்கின்றதே என்று கவலைப் படுவீர்கள். வெளிநாடு சென்றவர்கள் வேலை கிடைக்காமல் தாய்நாடு திரும்ப நேரிடும்.

# அர்த்தாஷ்டமத்தில் குரு! அதிக கவனம் தேவை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கும், 10ஆம் இடத்திற்கும் அதிபதியானவர். அவர் சுக ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் சுகங்களும், சந்தோஷங்களும் வர வேண்டும். என்றாலும் அர்த்தாஷ்டம குரு என்ற அடிப்படையில் இடையிடையே சிறுசிறு ஆரோக்கியத் தொல்லை வரத்தான் செய்யும். மருத்துவத்திற்கு ஒரு தொகையை ஒதுக்கும் சூழ்நிலை ஏற்படும். வருமானம் ஒருமடங்கு வந்தால் விரயங்கள் இருமடங்காகும். இது போன்ற நேரங்களில் சுப காரியங்களை நடத்த முயற்சி மேற்கொள்ளலாம். புதிய வாகனம் வாங்கலாமா என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது வாகன யோகம் அமையக்கூடிய நேரமிது. கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 8,10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே இந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. அஷ்டமத்தை குரு பார்ப்பதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வழிபிறக்கும். கடந்த சில லாக இருக்கும். வீடுமாற்றமோ, இடமாற்றமோ வருவதற்கான வாய்ப்பு உண்டு. வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமையும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு உண்டு. தொழிலை இடமாற்றம் செய்ய நினைப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் சில நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பர்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார நிலை திருப்தி தரும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். இடம் வாங்குவது, பூமி வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். வியாபாரத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

புதிய கூட்டாளிகள் வந்து

8.8.2025 முதல் 25.5.2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்த்த நற்பலன்கள் எளிதில் கிடைக்கும். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர். புதிய திருப்பங்கள் பலவும் வரப்போகின்றது. செல்வ நிலை உயரும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். வேலைப் பளுவின் காரணமாக உத்தியோகத்தில் இருந்து விலகி, சுயதொழில் தொடங்கும் சிந்தனை மேலோங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குருபகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 1, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். உச்சம் பெற்ற குருவின் பார்வை பதியும் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எனவே மிகுந்த நற்பலன்கள் வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அகலும். தொழிலில் அதிக வருமானம் கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாகக் குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல்- வாங்கல்கள் சரளமாக இருக்கும், குடும்பத்தில் மாங்கல ஓசை கேட்கும் சூழ்நிலை உண்டு. கணவன்- மனைவிக்குள் அனுசரித்து செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். பிள்ளைகளை நெறிப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். குருவின் வக்கிர காலத்தில் பணியிட மாற்றமும், பதவி உயர்வும் வரலாம். வியாழன் விரதமும், குரு வழிபாடும் நன்மையைத் தரும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில்...

ரா்ல் அகற்றப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய முன் வீதியில் அனுமதியின்றி திறக்கப்பட்ட அசைவ உணவகத்திற்கு எதிராக பல்வேறு அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையிலேயே நேற்று யாழ் மாநகரசபையினர் குறித்த விளம்பரப் பதாகையை அகற்றியுள்ளனர்.

அதேவேளை நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையை பேணும் வகையில் குறித்த உணவகத்தினை அகற்றக்கோரி கடந்த செவ்வாய்க் கிழமை கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மாநகர சபையிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-7,4,33)

## அதிகளவான...

குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

புதுக்குடியிருப்புச் சந்தைக்குப் பின்புறமாக உள்ள பகுதியில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,299)

## ஆலய உண்டி...

இதில் சாவகச்சேரி சரசாலை தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சிவராசன் (வயது-71) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி மேற்படி குடும்பஸ்தர் மரக்கறி வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் கொடிகாமம் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தபோது சந்தைக்கு அருகாமையில் உள்ள ஆலய உண்டியலுடன் மோதி மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை (22) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## இளவாலைச்...

பெண் வீட்டாருக்குப் பயந்து இருவரும் தலைமறைவாக இருந்துள்ளனர்.

பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இருவரும் இளவாலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுள்ளனர். இதன்போது அங்கு வந்த பெண் வீட்டார் குறித்த யுவதியை பிரிப்பதற்கு முயற்சி செய்த போதும், இருவருக்கும் 18 வயது நிறைவடைந்ததாலும் இருவரும் பிரிவதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலையில் அவர்களைப் பிரிக்க முடியாது என இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் பெண் வீட்டாரின் கட்டாயத்தின் பேரில் இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இருவருக்கும் திருமண வயது வந்து விட்டதால் அவர்களைப் பிரிக்க முடியாது, அவர்களது விருப்பம்போல சேர்ந்து வாழலாம் என நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

இவ்வாறான பின்னணியில் வழக்கு நிறைவடைந்து வரும்போது பி.ப 4 மணியளவில் பெண்ணின் சகோதரன் உள்ளிட்ட சிலர் அடங்கிய குழுவினர் அந்த இளைஞனைத் தாக்கி விட்டு யுவதியை வாகனத்தில் ஏற்றி கடத்திச் சென்றனர்.

இந்நிலையில் இது குறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

காயமடைந்த இளைஞன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட யுவதியை தெல்லிப்பழைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். (ம-7,4)

## இளம் யுவதி...

ராஜா விதுயாம்பாள் (வயது-30) என்ற இளம் யுவதியே மரணமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு உணவு உண்ட பின்னர் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு மயங்கியுள்ளார்.

உடனடியாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் இருதயம் செயலிழந்ததால் மரணம் ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,4)

## பிரபாகரன்...

இடையே நேற்று கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் வடக்கு உப்பை தெற்குக்கு விநியோகம் செய்வதை நிறுத்தப்பட வேண்டும் என்று ஊழியர்கள் குழுவுடன் ஒரு போராட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஏற்பாடு செய்ததாக அமைச்சர் ஹந்துன்னெத்தி குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் “வடக்கு உப்பு மற்றும் தெற்கு உப்பு என்று எந்த உப்பும் இல்லை. எங்களிடம் இலங்கையின் உப்பு உள்ளது.

அந்த நாட்களில் நீங்கள் விடுதலைப் புலிகளின் உப்பை சாப்பிட்டிருக்கலாம். இனி அத்தகைய உப்பு இல்லை. நாங்கள் முழு நாட்டையும் ஒன்றிணைத்துள்ளோம்,” என்று அமைச்சர் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, வடக்கின் உப்பை தெற்கிற்கு அனுப்பக்கூடாது என்று தான் ஒருபோதும் கூறவில்லை என்றும், ஆனையிறவு தொழிற்சாலை ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மட்டுமே தான் மத்தியஸ்தம் செய்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹந்துன்னெத்தி, தான் பொய் கூறவில்லை என்றும் தான் ஆனையிறவு தொழிற்சாலை ஊழியர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுடனான கலந்துரையாடல்களை சுட்டிக்காட்டுவதாகவும் தெரிவித்தார். (ம-7,4)

## மன்னாரில்...

சிப்பாய் 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

குறித்த சிப்பாய் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவமானது அச்சங்குளம் கடற்கரை ஓரத்தில் அமைக்கப்பட்ட கடற்படையின் கண்காணிப்பு காவலரணில் நேற்று வியாழன் (22) காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவரது மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,285)


மஹஜன சம்பத — திகதி 2025.05.22 — சீட்டிழுப்பு இலக்கம் 5837 — R 6 8 5 7 8 7
அத சம்பத — R 5 7 8 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0412
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.05.22 — சீட்டிழுப்பு இலக்கம் - 1867 — G 11 32 47 76 G — Double Chance 62412

மெகா பவர் — திகதி 22/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2185 — S 12 06 43 51 56

ஜய — திகதி 2025.05.22 — சீட்டிழுப்பு இலக்கம் 105 — C 2 9 4 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4079 — சீட்டிழுப்பு திகதி 22.05.2025 — C 47 55 72 75 — C

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.05.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1146 — கடகம் 24 29 37 58 கடகம் — 38224 — 30

உத்தியோகபூர்வ முடிவுகள் — 22.05.2025 — வெற்றி வாரம் 545 — A 2 2 7 7 5 3 — 90686 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,709,133.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2811 — சீட்டிழுப்பு திகதி 2025.05.22 — தினம் வியாழக்கிழமை — 09 33 38 40 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,407,982.40

சனிதா — திகதி 22.05.2025 — வெற்றி வாரம் 4972 — 05 42 72 73 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,526,041.20 — 93524

சசிரி — வெற்றி வாரம் 687 — சீட்டிழுப்பு திகதி 22.05.2025 — வியாழக்கிழமை — 02 16 30 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4523 — சீட்டிழுப்பு திகதி 22.05.2025 — தினம் வியாழக்கிழமை — 03 28 36 58 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,435,568.80 — 111921

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — M 23 15 36 43 70 — 1987 — 22.05.2025 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட்

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2637 — சீட்டிழுப்பு திகதி: 2025.05.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,410,158.40 — 07 34 54 71 I — 778519


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

1. கணக்காளர் (Accountant)
2. கணக்கு உதவியாளர் (Assistant Accountant)
3. அலுவலக உதவியாளர் (Office Assistant)
4. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT-Civil
5. கணிய அளவையியலாளர் (QS) HND or NCT QS
6. உதவி கணிய அளவையியலாளர் (AQS)

சுயவிபரக்கோவையை Whatsapp / Email மூலம் அனுப்பி வைக்கவும். 077 210 0749 (WhatsApp)
dreambuild2024@hotmail.com
யாழ்ப்பாணம் (4359)



## விற்பனைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் Brown வீதி முகப்புடன் 6½ பரப்பு, 3½ பரப்பு, 2 பரப்புக் காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு. (C-3022)

தொடர்பு: 074 123 9947



## "சிரஞ்சீவி" சஞ்சிகை வெளியீட்டு விழா







**நாள் :**
24.05.2025, சனிக்கிழமை
காலை 9.00 மணி

**இடம் :**
பூரண நிலையம் – ஊரெழு கிழக்கு
ஊரெழு, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**தலைமை :**
திரு.ந.சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்)

**பிரதம விருந்தினர் :**
பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா
(துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சஞ்சிகை ஆய்வு :**
திரு.ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் வலம்புரி நாளிதழ்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பூரண நிலையம், யாழ். ஊரெழு. (4358)


## வடக்கில்...

வடக்கில் வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது அவசியம் என உலக வங்கி பிரதிநிதிகளிடம் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.விஜயம் செய்துள்ள உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில், ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு உலக வங்கி தொடர்ச்சியாக பயணம் மேற்கொண்டு கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருவதாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார். அத்துடன் விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் மூன்றாம் தரப்பு ஊடாக ஏற்றுமதி செய்யப்படுவதால் உற்பத்தியாளர்கள் உரிய இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார். சிறு கைத்தொழில்துறை வடக்கில் வளர்ச்சியடைந்து செல்கின்றபோதும் அவர்களுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் இல்லாமையால் அந்தத் துறையை விரிவாக்க முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

உலக வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள் போன்று பலவற்றை உருவாக்குவதன் ஊடாக மேலும் விவசாயத்துறையை வலுப்படுத்தலாம் என ஆளுநர் குறிப்பிட்டார். (ம-4,7)

## சிறைக்கு...

எம்மை சிறைக்கு அனுப்பினால் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது. எம்மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாக தீர்த்துக்கொள்கிறோம். ராஜபக்ஷக்களையும் கடந்த அரசாங்கங்களையும் விமர்சித்துக்கொண்டிருக்காமல் சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுங்கள் என்றார். (ம-4,7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237 (C-3023)



Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503 (3992)



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (1160)



## சேல்ஸ்மன் தேவை

எமது புடவைக் கடைக்கு தொழில் பழக, அனுபவம் உள்ள புடவை விற்பனையாளர் தேவை. (4361)

சிவகணேசன் TEX
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.



# வடமராட்சி வடக்கு தும்பளை
# நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில்
## வருடாந்த வெளிமடை உற்சவம்



### 2025.05.30 - 31 ஆம் திகதி
### அறிவித்தலும் ஆசித்தலும் பூஜித்தலும்

**நெல்லண்டை அம்மன் துதி**

நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய்மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதிநலத்தாள் மலர்த்தாள் சரண்

சுபமங்களம் நிறைந்த விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் 9ம் நாள் (23.05.2025) இன்று வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தலும் தொடர்ந்து (30.05.2025) வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற இருக்கும் அனைத்து தெய்வதா கைங்கரியங்களும் பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசி வேண்டியும் அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும் அனைத்து நிலை அடியார்களும் அன்பர்களும் உரித்தாளர்களும் வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம்.

**குறிப்பு**

தும்பளை இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
விளக்கு வைத்தல் : 16.05.2025 வெள்ளிக்கிழமை
வேள்வி உற்சவம் : (23.05.2025 - 24.05.2025) நடைபெறும்.

ஆசித்தலும் பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக.

அன்னையின் அடிமை
அமரர் சைவசிந்தாந்த பண்டிதர்,
சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில், இலட்சுமணந்தோட்டம்
வீரமாகாளி அம்மன் வட பத்திரகாளியம்மன் தேவஸ்தான
பிரதம குருவும், ஆதின கர்த்தாவும் தேவஸ்தானதிபதியும்

சிவஸ்ரீ.இராம.சுந்தரலிங்கக்குருக்கள்
சிவஸ்ரீ.சோம.தனஞ்சயக்குருக்கள்
சிவஸ்ரீ.சுந்தர.விபூசன்குரு
சிவஸ்ரீ.சுந்தர.திருஸ்யந்த்குரு
(4360)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.192, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org